"வீராச்சல ஸ்ரீராமசந்த்ர ஸூப்ரபாதம்"





ஸ்ரீமதே ஸ்ரீ வராஹ மஹா தேசிகாய நமஹ 🙏
ஸ்ரீமதே ரங்க ராமானுஜ மஹாதேசிகாய நமஹ 🙏
ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம் 🙏

**ஸ்ரீரங்கம் ஸ்ரீமுஷ்ணம் பெரியாண்டவன் ஸ்ரீ ரங்க ராமானுஜ மஹாதேசிகன்** பூர்வாச்ரமத்தில் அருளிய பல ஸ்தோத்திர படைப்புகளில் சிலவற்றை **ஸ்தோத்ராவளீ**

என்ற தொகுப்பாக வந்தது. அதில் இருந்து **வீராச்சலத்தில்** இருக்கும் சக்கரவர்த்தி திருமகன் **ஸ்ரீராமனுக்கு பாடி அருளிய ஸுப்ரபாதமும்** ஒன்று . இது பலஸ்ருதியுடன் சேர்த்து 30 ஸ்தோத்திரங்கள் கொண்டது. நம் ஆசார்ய வள்ளலின் இப்படைப்பை அர்த்தத்துடன் ஒவ்வொன்றாக சேவித்து அனுக்கிரஹம் பெறுவோம்🙏
இன்றைய தினம் 8**வது** ஸ்லோகம் சேவிக்கலாம் 🙏

**ஸ்லோகம்** 8👇
**விஸ்வம்ப4ரா வஸுமதீ விமலாக்3ரக3ண்யா**
**வேஷம் பூபோஷ ஸுரபே4ர்ப4வதீ3க்ஷணாய।**
**வேதா3ஸ்ஸ்துவந்தி ப4வதோ**
**விவிதா4ம் ஹி லீலாம்**
**வீராத்3ரி ராக4வ விபோ4 தவ ஸுப்ரபாதம் ॥8॥**

**அர்த்தம்** 👇
எல்லாச் செல்வமும் நிறைந்த நிகரற்றவளான உலகனைத்தையும் தாங்கி நிற்கின்ற பூமிதேவி, தேவரீருடைய கடைக்கண் பார்வைக்காக காமதேனுவின் உருவை ஏற்றாள். வேதங்களெல்லாம் உன்னுடைய பல வகையான லீலைகளைப் பற்றி பரக்கப் பாடுகின்றன,வீராச்சல நாயகனே, ராகவா! உனக்கு **ஸுப்ரபாதம்**.

பதிவிறக்கம்,
அடியேன் தாஸன் 🙏
சித்ரா அமுதன் 🙏
(Vadodara) 🙏